DINAMALAR

14 OCT 2022

PAGE 2

# புதுச்சேரி பல்கலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, அக். 14–**

புதுச்சேரி பல்கலைக்கழகம், லண்டனில் உள்ள பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

புதுச்சேரி பல்கலைகழகம் மேலாண்மை பள்ளி வணிகவியல் துறை, கற்றல் மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் குறித்து, பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சங்கம் (ஏ.சி.சி.ஏ.,) லண்டன் என்ற அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது. துணை வேந்தர் குர்மீத்சிங் வழிகாட்டுதலில், இயக்குநர் தரணிக்கரசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

ஏ.சி.சி.ஏ., போன்ற முக்கிய உலகத்தர கல்வி நிறுவனங்களின் ஒத்துழைப்பின் முக்கியத்துவம் பற்றி பதிவாளர் அமரேஷ் சமந்தராய கூறினார்.

ஏ.சி.சி.ஏ., இந்திய வர்த்தக மேம்பாட்டு தலைவர் குஷ் அஹூஜா, உலகளாவிய முதலாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய இரு அமைப்புகளும் பாடத்திட்டத்தில் ஒப்புமை கொண்டு வருவதன் அவசியத்தை கூறினார்.

தென்னிந்திய தலைவர் சரவணகுமார், ஒப்பந்த நன்மைகள், பாடத்திட்டத்தில் தரத்தை மேம்படுத்தும் நடைமுறை பற்றி விளக்கினார்.

முன்னதாக சர்வதேச உறவுகள் துறை பேராசிரியர் சுப்ரமணியம் ராஜூ வரவேற்றார். வணிகவியல் துறை தலைவர் நடராஜன் நன்றி கூறினார்.